## மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06

**ந.க.எண். 6519 / G3 / 2023, நாள். 07.03.2023**

**பொருள் :** பள்ளிக் கல்வி - மாநில மதிப்பீட்டுப் புலம் - **மாவட்டம் தோறும் 6 முதல் 9 வகுப்பு வரை வளரறி மதிப்பீடு சார்ந்த வினாடி வினா நடத்துதல், வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் பயிற்சி அளித்தல்** - சார்ந்து.

**பார்வை :**
1. பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் கூட்டக்குறிப்பு நாள்: 04.03.2023
2. பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் இணைச் செயல்முறைகள், ந.க.எண்.6519 / G3 / 2023 நாள் 14.02.2023
3. G.O. (Ms) No.155, School Education (ERT) Department, dated 16.11.2021

www.Padasalai.Net

தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றான "மாநில மதிப்பீட்டுப் புலம்" பார்வையில் காணும் அரசாணை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பார்வையில் காணும் பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களின் கூட்டக்குறிப்பில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கணினி வழி வினாடி வினா நடத்துதல் தொடர்பாக பின்வரும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் முதற்கட்டமாக 16.02.2023 முதல் அனைத்து அரசுப் பள்ளி வகுப்பாசிரியர்களும் கணினி வழி வினாடி வினா நிகழ்வை உருவாக்கி நடத்தி வருகின்றனர்.
2. தற்போது மேற்காண் மாவட்டங்களுடன் தருமபுரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் இணைப்பு - 1 இல் உள்ளவாறு மார்ச் 9, 2023 முதல் படிப்படியாக 6 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வினாடி வினா நிகழ்வுகளை நடத்த வேண்டும்.
3. இவ் வினாடி வினாவுக்கான நிகழ்வுகளை உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் ஒவ்வொரு வகுப்பாசிரியரும் திங்கட்கிழமைதோறும் 6 ஆம் வகுப்புக்கும், செவ்வாய்க்கிழமைதோறும் 7 ஆம் வகுப்புக்கும், புதன்கிழமைதோறும் 8 ஆம் வகுப்புக்கும், வியாழக்கிழமைதோறும் 9 ஆம் வகுப்புக்கும் நடத்த வேண்டும். விடுமுறையிலிருந்த மாணவர்கள் அடுத்த ஒரு நாள் மட்டும் வினாடி வினாவில் பங்கேற்க இயலுமாறு நிகழ்வுகளை உருவாக்க வேண்டும். **(பொதுத்தேர்வு மையமாக உள்ள பள்ளிகள், பொதுத்தேர்வு நடைபெறும் நாட்களில் பிற்பகல் வேளைகளில் நிகழ்வுகளை நடத்திக் கொள்ள வேண்டும்; விடுபட்ட மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமைகளிலும் நடத்திக் கொள்ளலாம்)**

4. ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் வினாடி வினா நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்திய 52 ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலை இணைப்பு - 2 இல் உள்ளவாறு ஈரோடு, திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெற்று, அவர்களைக் கொண்டு தருமபுரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத் தலைமையகங்களில் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகம் உள்ள அரசுப் பள்ளிகளில் தங்கள் மாவட்டத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்குவர். இப்பயிற்சியில் பங்குபெறும் ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் உள்ள அனைத்து வகுப்பாசிரியர்களுக்கும் இம்முறையைத் தெளிவாக அறிமுகப்படுத்த வேண்டும்.
5. இப்பயிற்சியை உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள அரசுப் பள்ளிகளில் மட்டுமே நடத்த வேண்டும்.
6. பயிற்சியில் பங்குபெறும் வகுப்பாசிரியர்கள் அனைவரும் தமிழ்-6, ஆங்கிலம்-6, கணிதம்-6, அறிவியல்-6, சமூக அறிவியல்-6 என 30 வினாக்களைக் கொண்ட ஒரு வினாத்தாளையும், அதற்கு விடையளிக்க 30 நிமிடங்களையும் ஒதுக்கி வினாடிவினா நிகழ்வை வரிசை எண்.3 இல் உள்ளவாறு உருவாக்க வேண்டும்.
7. தங்கள் மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்கள், உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் அமைந்துள்ள பள்ளிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் தருமபுரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்களும் இணைந்து பயிற்சி நடைபெறும் பள்ளிகளைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.
8. ஒவ்வொரு பயிற்சி நடைபெறும் பள்ளியிலும் 30 உயர்தொழில்நுட்ப ஆய்வக ஆசிரியர்களுக்கு மிகாதவாறு இந்த ஒரு நாள் பயிற்சியை நடத்த வேண்டும்.
9. ஒரு பயிற்சி நடைபெறும் பள்ளிக்கு இரு கருத்தாளர்கள் எனத் திட்டமிட்டு பயிற்சிக்குத் தேவைப்படும் உயர்தொழில்நுட்ப ஆய்வகக் கருத்தாளர்களின் பெயர்ப்பட்டியலை இணைப்பு - 2 இல் உள்ளவாறு முன்கூட்டியே ஈரோடு, திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பயிற்சி நடைபெறும் தருமபுரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுப் பெறுதல் வேண்டும்.
10. உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் குறைபாடுகள், வினாடி வினா நிகழ்வுகளை உருவாக்கும்போது ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண 14417 தொலைபேசிச் சேவையைப் பயன்படுத்த ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.
11. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்க வேண்டும்.

www.Padasalai.Net

12. உயர்தொழில் நுட்ப ஆய்வகம் அமைந்துள்ள பள்ளிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் இணைப்பு - 3 இல் உள்ள வழிமுறைகளில் புலமை பெற்றிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
13. பயிற்சி நாளான 09.03.2023 அன்று பயிற்சி பெறும் ஆசிரியர்கள், 10.03.2023 அன்று தங்கள் பள்ளிகளில் பணியாற்றும் பிற ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதுடன், அன்றே வினாத்தாள் நிகழ்வை உருவாக்க வேண்டும்.
14. மேலும் வரிசை எண்.3 இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, 13.03.2023 முதல் தங்கள் மாவட்டங்களில் தொடர்ச்சியாக வினாடி வினா நடைபெறுவதை தருமபுரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.
15. இப்பயிற்சியில் தருமபுரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மாவட்ட கருத்தாளர்களாகச் செயல்படும் ஆசிரியர்களுக்கு ***மதிய உணவும், பயணப்படியும்*** வழங்கத் தேவையான நடவடிக்கைகளை தொடர்புடைய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்களும் திட்டம் மற்றும் செயல்பாட்டு நிதியிலிருந்து இணைப்பு - 5 இல் உள்ளவாறு மேற்கொள்ள வேண்டும்.

பள்ளிக்கல்வி ஆணையர் அவர்கள் வழங்கியுள்ள மேற்காண் நெறிமுறைகளை செயல்படுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

**இயக்குநர்**

**இணைப்பு:**

1. வாராந்திர வளரறி மதிப்பீடு / வினாடி வினா பயிற்சி நடத்துவதற்கான அட்டவணை
2. ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களிலிருந்து வரும் கருத்தாளர்களின் பெயர்ப்பட்டியல்
3. வழிகாட்டு நெறிமுறைகள்
4. பங்கேற்பாளர்களின் பெயர்ப்பட்டியல்
5. உத்தேச செலவினப் பட்டியல்

**பெறுநர்:**

1. தருமபுரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், ஈரோடு, திருப்பூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. தருமபுரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், ஈரோடு, திருப்பூர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்

**நகல்:**

1. ஆணையர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை - 06
2. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை -06

www.Padasalai.Net

**இணைப்பு -1**

**வாராந்திர வளரறி மதிப்பீடு / வினாடி வினா பயிற்சி நடத்துவதற்கான அட்டவணை**

| வரிசை எண் | பயிற்சி நாள் | மாவட்டம் | ஈரோடு மாவட்டத்தில் இருந்து செல்ல வேண்டிய கருத்தாளர்கள் | பயிற்சி நடைபெறும் உயர்தொழில் நுட்ப ஆய்வகங்களின் எண்ணிக்கை | பயிற்சி நடைபெற வேண்டிய இடங்கள், எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 09.03.23 | தருமபுரி 226 | 16 | 8 | பென்னாகரம் - 1<br>தருமபுரி - 2<br>அரூர் - 2<br>பாப்பிரெட்டிபட்டி - 1<br>பாலக்கோடு - 1<br>காரிமங்கலம் - 1 |
| 2 | 09.03.23 | பெரம்பலூர் 91 | 6 | 3 | பெரம்பலூர் - 1<br>வேப்பந்தட்டை - 1<br>ஆலத்தூர், குன்னம் - 1 |

| வரிசை எண் | பயிற்சி நாள் | மாவட்டம் | திருப்பூர் மாவட்டத்தில் இருந்து செல்ல வேண்டிய கருத்தாளர்கள் | பயிற்சி நடைபெறும் உயர்தொழில் நுட்ப ஆய்வகங்களின் எண்ணிக்கை | பயிற்சி நடைபெற வேண்டிய இடங்கள், எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 3 | 09.03.23 | திருச்சிராப் பள்ளி 214 | 16 | 8 | திருச்சிராப்பள்ளி - 2<br>திருவரங்கம் - 1<br>லால்குடி - 1<br>முசிறி - 1<br>துறையூர் - 1<br>மணப்பாறை - 1<br>மருங்காபுரி - 1 |
| 4 | 09.03.23 | அரியலூர் 118 | 8 | 4 | அரியலூர் - 1<br>செந்துறை - 1<br>உடையார்பாளையம் - 1<br>ஆண்டிமடம் - 1 |

www.Padasalai.Net

**இணைப்பு -2**

**ஈரோடு / திருப்பூர் மாவட்டங்களிலிருந்து வரும் கருத்தாளர்களின் பெயர்ப்பட்டியல்**

| வரிசை எண் (a) | கருத்தாளரின் பெயர், பதவி மற்றும் பள்ளி (b) | தொலைபேசி எண் (c) | பயிற்சி வழங்க வேண்டிய மாவட்டம் (d) | பயிற்சி இடம் (e) |
|---|---|---|---|---|
| 1 | | | | |

*குறிப்பு: கலம் (d) மற்றும் (e) ஆகியவற்றை பயிற்சி நடைபெறும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பூர்த்தி செய்ய வேண்டும். கலம் (b) மற்றும் (c) ஆகியவற்றை பயிற்சி வழங்கும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வழங்க வேண்டும். பூர்த்தி செய்த பெயர்ப்பட்டியலை தொடர்புடைய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் tnscertjdirector@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.*

**இணைப்பு -4**

**பங்கேற்பாளர்களின் பெயர்ப்பட்டியல்**

| வரிசை எண் (a) | பங்கேற்பாளரின் பெயர், பதவி மற்றும் பள்ளி (b) | தொலை பேசி எண் (c) | பயிற்சி பெற்ற மாவட்டம் (d) | பயிற்சி பெற்ற இடம் (e) | ஒருங்கிணைப் பாளர்களின் பெயர், தொலைபேசி (f) |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |


*குறிப்பு: பயிற்சி பெறும் மாவட்டங்களின் முதன்மைக் கல்வி அலுவலர்கள், பயிற்சி நடைபெறும் இடங்களுக்கேற்ப தேவைப்படும் ஒருங்கிணைப்பாளர்களை நியமித்துக் கொள்ள வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தொடர்புடைய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் tnscertjdirector@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.*

www.Padasalai.Net


# இணைப்பு - 3

# உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களின் வழி வளரறி மதிப்பீடுகள்

1. பள்ளிகளில் அமைந்துள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Labs) அனைத்தையும் முதலில் சர்வர் கணினியைக் கொண்டு இணைய வழியில் பதிவு செய்திருக்க வேண்டும். இதற்கு சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியைப் பயன்படுத்த வேண்டும். இப்பதிவுமுறை ஒரு முறை மட்டுமே மேற்கொள்ள வேண்டிய செயலாகும். இந்த இணையதளம் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் மட்டுமே செயல்படக் கூடியது.





2. சர்வர் கணினியை முறையாகப் பதிவு செய்திருப்பின், அடுத்த முறை http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியைத் திறந்தால், நம் பள்ளியின் பெயரும் UDISE எண்ணும் திரையில் தெரியும். இதில் ஏதேனும் பிழைகள் இருந்தால் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தில் உள்ள VoIP தொலைபேசி வழியாக 100004 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டு குறையைத் தெரிவிக்கலாம். மேலும் பிற தொலைபேசிகளின் வழியாக 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டும் குறையைத் தெரிவிக்கலாம். தங்கள் பள்ளியைப் பதிவு செய்ததை உறுதிபடுத்திய பிறகே வினாத்தாளுக்கான நிகழ்வுகளை உருவாக்கத் தொடங்க வேண்டும்.
3. ஒருமுறையேனும் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் ஆசிரியரின் EMIS ID வழியாக உள்நுழைய வேண்டும். அங்கு வலப்பக்கத்தில் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Update Credentials பிரிவில் உள்ள Update பட்டனைச் சொடுக்க வேண்டும். இது ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிகழ்வாகும். இதற்குப் பின் சர்வர் கணினியில் நம் EMIS ID ஐ விட்டு வெளியேறலாம்.





4. மாணவர்கள் பயன்படுத்த ஏதுவாக உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தில் உள்ள ஒவ்வொரு கணினியிலும் http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியை Bookmark செய்து வைப்பது நலம்.

www.Padasalai.Net

5. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களில் வினாடி வினா மற்றும் வளரறி மதிப்பீடுகளை நடத்துவதற்கு, முதற்கட்டமாக https://exam.tnschools.gov.in என்னும் இணையதளத்தில் தேர்வு நிகழ்வுகளை (Events) உருவாக்க வேண்டும். இந்த இணையதளத்தை உயர்தொழில்நுட்ப ஆய்வகம் மட்டுமன்றி இணையத் தொடர்புள்ள எந்தக் கணினி / கைப்பேசி மூலமாகவும் அணுக முடியும். ( குறிப்பு: இதற்கு முன்பாக EMIS வழியாகப் பயன்படுத்திய exams.tnschools.gov.in என்னும் முகவரியைப் பயன்படுத்தக்கூடாது. )





6. நம் EMIS கணக்கு எண்ணையும் கடவுச் சொல்லையும் கொண்டு https://exam.tnschools.gov.in இணையதளத்தில் நுழைந்து வினாடி வினா / வளரறி மதிப்பீடுகளுக்கான தேர்வு நிகழ்வுகளை உருவாக்கத் தொடங்கலாம். (*குறிப்பு:* ஆசிரியர் / தலைமை ஆசியரின் EMIS கணக்கு எண்ணை மட்டுமே பயன்படுத்த வேண்டும். பள்ளியின் EMIS கணக்கு எண்ணையோ UDISE எண்ணையோ பயன்படுத்தக் கூடாது.)





7. வெற்றிகரமாக உள்நுழைந்த பின், **Add Event** இணைப்பைச் சொடுக்க வேண்டும்.
8. Event Title கேட்கப்பட்டுள்ள இடத்தில் விளக்கமான பெயரை வழங்க வேண்டும்.

www.Padasalai.Net


(***சான்று:*** 07 CLASS - A SECTION - teacher name - MATHS - TERM 3 - 06/02/2023 - 10:00 AM)





9. Event Mode பகுதியில் OFFLINE தேர்வு செய்ய வேண்டும்.





10. Event Type பகுதியில் MCQ தேர்வு செய்ய வேண்டும்.
11. வகுப்பு, பிரிவு, பாடம், மொழி ஆகியவற்றை ஆசிரியர் விருப்பப்படி தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.





12. ALL DAY என்னும் பகுதியைத் தேர்ந்தெடுக்கக் கூடாது.




13. வினாடி வினா / வளரறி மதிப்பீடுகளை இரண்டு நாட்களுக்கு முன்பே திட்டமிட வேண்டும். அன்றன்றே புதிய நிகழ்வுகளை உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும். சான்றாக இன்று 28/02/2023 எனில், 02/03/2022 அன்றும் அதற்குப் பிறகும் நடக்க வேண்டிய மதிப்பீடுகளுக்கான நிகழ்வுகளையே உருவாக்க வேண்டும். கால வரையறை கொண்ட ஒருநாள் நிகழ்வை உருவாக்குவது விரும்பத்தக்கது.





14. தங்கள் பள்ளியைத் தேர்ந்தெடுத்து CREATE and ALLOCATE பட்டனைச் சொடுக்க வேண்டும்.





www.Padasalai.Net


15. வரும் திரையில் OK பட்டனைச் சொடுக்க வேண்டும்.




16. இப்போது நாம் Paper Generator என்னும் புதிய தளத்திற்கு வந்திருப்போம்.





17. முதலில் வலப்பக்க மூலையில் உள்ள EDIT பட்டனைச் சொடுக்க வேண்டும்.





www.Padasalai.Net


18. அங்கு நாம் உருவாக்கவுள்ள வினாத்தாளின் வகை குறித்து கேட்கப்பட்டுள்ள களங்களை நிரப்பி SEARCH பட்டனைச் சொடுக்க வேண்டும்.





19. அதற்குக் கீழ் வெளிவரும் பாடத்தலைப்புகளைத் தேவைக்கேற்பத் தேர்ந்தெடுத்துக் கொண்டு CREATE பட்டனைச் சொடுக்கி ஒரு குழுவை உருவாக்க வேண்டும்.




20. இதே போல் மீண்டும் ஒரு முறை அதே பாடத் தலைப்பையோ அல்லது பிற தலைப்புகளையோ தேர்ந்தெடுத்து மீண்டும் ஒரு குழுவை உருவாக்க வேண்டும். இது போல எத்தனை குழுக்களை வேண்டுமானாலும் உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் குறைந்தது இரு குழுக்களையாவது உருவாக்க வேண்டும். (*குறிப்பு:* வெவ்வேறு பாடங்களுக்குமான வினாக்குழுக்களையும் இதே இடத்தில் உருவாக்கிக் கொள்ளலாம்)





21. அங்குள்ள Questions to Insert என்னும் பகுதியின் கீழ் இடம்பெறும் எண்ணைச் சொடுக்கி ஒவ்வொரு குழுவிலிருந்தும் நமக்குத் தேவைப்படும் வினாக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும்.





www.Padasalai.Net


22. இவ்வாறாக குறைந்த அளவு 30 வினாக்கள் அமையுமாறு வினாக்குழுவை உருவாக்குவது நலம். (*குறிப்பு*: தமிழ்-6, ஆங்கிலம்-6, கணிதம்-6, அறிவியல்-6, சமூக அறிவியல்-6)




23. அடுத்ததாக இதன் கீழ் உள்ள CONFIRM பட்டனைச் சொடுக்க வேண்டும்.





24. இப்போது CONFIRM பட்டன் மறைந்து அந்த இடத்தில் வந்துள்ள CREATE VERSION பட்டனைச் சொடுக்க வேண்டும்.





25. இப்போது மேற்கண்ட படிவங்கள் யாவும் மறைந்து புதிய திரை தோன்றியிருக்கும். தேர்வுக்கான கால நேரம் ஒரு மணி நேரம் ஆகும். இதை மாற்றியமைக்க முடியும்.


www.Padasalai.Net


(*குறிப்பு:* ஒரு மாணவருக்கான தேர்வு நேரம் 30 மணித்துளிகள்)




26. இத்திரையில் வலப்புறம் உள்ள EDIT பட்டனைச் சொடுக்க வேண்டும்.






27. இப்போது கீழே உள்ள No. of Sets மற்றும் No. of versions களத்தை நிரப்ப வேண்டும். எத்தனை வினாத்தாள்களை உருவாக்க வேண்டும் என்பதை No. of Sets களம் வழியாக முடிவு செய்யலாம். நாம் உருவாக்க உள்ள வினாத்தாள்களை எத்தனை வழிமுறைகளில் உருவாக்கலாம் என்பதை No. of versions களம் வழியாக முடிவு செய்யலாம். பொதுவாக நம் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இதை முடிவு செய்யலாம். குறைந்த மாணவர் எண்ணிக்கை எனில் 2 set 4 versions எனவும், அதிக மாணவர் எண்ணிக்கை எனில் 8 set 16 versions எனவும் எல்லைகளைக் கொண்டு ஆசிரியர்களே இதை முடிவு

www.Padasalai.Net


செய்யலாம். பிறகு Generate Paper பட்டனைச் சொடுக்க வேண்டும்.





28. இப்போது புதிதாகத் தோன்றியுள்ள Start Allocation பட்டனைச் சொடுக்க வேண்டும்.




29. புதிதாகத் திரையில் தோன்றியுள்ள தகவல்களை உறுதி செய்து Allocate பட்டனைச் சொடுக்க வேண்டும்.





30. திரையில் தோன்றும் வினாவுக்கு OK பட்டனைச் சொடுக்கி உறுதி செய்ய வேண்டும்.




www.Padasalai.Net

31. வெற்றிகரமாகத் திட்டத்தைச் செயல்படுத்திய பிறகு இத்திரையை விட்டு வெளியேறலாம்.





32. நாம் உருவாக்கிய வினாத்தாளுக்கான Paper IDs அங்கு உருவாகி இருப்பதை நாம் காணலாம். உறுதி செய்த பிறகு அத்திரையை விட்டு வெளியேறலாம்.


No. of sets* 2 No. of versions* 4

| Participant Category | Participant Name | No. of sets | Total no. of papers | Paper ID |
|---|---|---|---|---|
| SCHOOL | PUMS,JANAPPAN CHATRAM | 2 | 8 | ['DV184440103', 'DV184440101', 'DV184440102', 'DV184440104', 'DV184440204', 'DV184440203', 'DV184440202', 'DV184440201'] |


**33.** இப்போது Paper Generator வலைப்பக்கத்தை விட்டு விலகி மீண்டும் https://exam.tnschools.gov.in என்னும் இணையதளத்தில் நுழைய வேண்டும். அங்கு Event Management இணைப்பின்கீழ் உள்ள Offline பட்டனைச் சொடுக்க வேண்டும். இப்போது நாம் உருவாக்கிய வினாத்தாளுக்கான நிகழ்வு உருவாகி இருப்பதைக் காணலாம்.




**34.** வினாத்தாளுக்கான நிகழ்வு இரண்டு நாட்களுக்கு முன்பே உருவாக்கப்பட்டிருந்தால் வினாத்தாள்கள் தானாகவே உயர்தொழில்நுட்ப ஆய்வகத்திற்கு இணைய வழியில் விநியோகம் ஆகும். அவ்வாறு வினாத்தாள் தானாகவே உருவாகவில்லை எனில் நாம் உருவாக்கிய வினாத்தாள் நிகழ்வுக்கு எதிரே உள்ள Generate Question Paper பட்டனை நாம் சொடுக்க வேண்டும்.





**35.** சற்று நேரத்தில் நாம் உருவாக்கிய வினாத்தாள்கள் அனைத்தும் மாணவர்களுக்கு விநியோகம் செய்ய ஆயத்தமாகும். இங்கு OK பட்டனைச் சொடுக்க வேண்டும்.




**36.** இப்போது நாம் வெற்றிகரமாக மாணவர்களுக்கான வினாடி வினா / வளரறி மதிப்பீட்டு நிகழ்வையும் அதற்கான வினாத்தாளையும் உருவாக்கி விட்டோம். நம் வினாத்தாள்களை உயர்தொழில் நுட்ப ஆய்வகத்தின் வழி மாணவர்களுக்கு வழங்குவதற்கு நமக்கு இரண்டு வழிகள் உள்ளன.

a. உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியில் ஆசிரியர் தம் EMIS ID கொண்டு உள்நுழைய வேண்டும். பின்னர் வலப்பக்கத்தில் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Fetch Events பகுதியில் உள்ள Update பட்டனைச் சொடுக்க வேண்டும்.





( அல்லது )


b. 7 zip கோப்பு வடிவிலான வினாத்தாளை https://exam.tnschools.gov.in இணைய முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து, உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து, http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியில் உள்நுழைந்து, அங்கு Manage பட்டனைச் சொடுக்கி குறிப்பிட்ட வினாத்தாள் நிகழ்வுக்கு எதிரே உள்ள Choose File பட்டனைப் பயன்படுத்தி, பதிவிறக்கம் செய்த 7 zip கோப்பு வடிவிலான வினாத்தாளைப் பதிவேற்றம் செய்தும் தேர்வைத் தொடங்கலாம்.

www.Padasalai.Net

37. வினாத்தாள் நிகழ்வுகளை எந்தக் கணினி அல்லது திறன்பேசியில் இருந்தும் உருவாக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கண்ட செயல்பாடுகளில் ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். அல்லது உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் உள்ள VoIP தொலைபேசி மூலம் 100004 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டும் குறைபாடுகளைத் தெரிவிக்கலாம்.
38. அடுத்ததாக வினாடி வினா / வளரறி மதிப்பீடு நடைபெறும் நாளன்று ஆசிரியர் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தில் உள்ள சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியை அணுக வேண்டும்.
39. ஆசிரியர் தன்னுடைய EMIS IDஐப் பயன்படுத்தி அதன் வழியாக உள்நுழைய வேண்டும்.
40. அவர் உருவாக்கிய வினாத்தாள்கள் அதற்கான நிகழ்வுகளுடன் திரையில் அவருக்குத் தோன்றும்.





41. வினாத்தாள்கள் தானாகவே பதிவிறக்கமாகி உள்ளதா என்பதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு பதிவிறக்கம் ஆகவில்லை எனில் தான் உருவாக்கிய நிகழ்வுக்கு எதிரே உள்ள Download QP பட்டனைச் சொடுக்கி பதிவிறக்கம் செய்ய வேண்டும். இப்பணியை வினாடி வினா தொடங்கும் நேரத்துக்கு முன்பாகவே செய்திருக்க வேண்டும். இதற்குப் பிறகு ஆசிரியர் தன் EMIS ID இல் இருந்து வெளியேறி விடலாம். இச்செயலுக்குப் பிறகு தேவை இருப்பின் இணைய இணைப்பையும் நிறுத்தி விடலாம்.





42. வினாடி வினா / வளரறி மதிப்பீடு தொடங்கும் நேரத்திற்கு முன்பாகவே மாணவர்களை உயர்தொழில் ஆய்வகங்களில் உள்ள அனைத்து கணினிகளிலும் அமர வைக்க வேண்டும். மாணவர்கள் இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியில் தங்கள் EMIS IDஐப் பயன்படுத்தி


உள்நுழைய வேண்டும்.





43. தற்போது திரையில் தெரிகின்ற தன்ஆசிரியரால் உருவாக்கப்பட்ட வினா நிகழ்வுக்கு எதிரே உள்ள START பட்டனை மாணவர் சொடுக்கி தேர்வைத் தொடங்கலாம். இந்த படிநிலைகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். அல்லது உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் உள்ள VoIP தொலைபேசி மூலம் 100004 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டும் குறைபாடுகளைத் தெரிவிக்கலாம்.
44. மாணவர்கள் தங்கள் ஆசியரால் உருவாக்கப்பட்ட வினாத்தாளைக் கொண்டு வளரறி மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.





45. கடைசி வினாவுக்கு பதிலளித்து Submit பட்டனைச் சொடுக்குவதன் மூலமாக மாணவரால் விடைத்தாளை ஒப்படைக்க முடியும்.





46. விடைத்தாளை ஒப்படைத்த பிறகு தங்கள் செயல்திறனை மாணவர்கள் திரையில் காண இயலும்.





47. இப்போது மாணவர் தங்கள் EMIS ID இலிருந்து வெளியேறலாம். தன்னுடைய முறைக்காகக் காத்திருக்கும் அடுத்த மாணவர் வினாடி வினா / வளரறி மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.
48. வினாடி வினா / வளரறி மதிப்பீட்டை வெற்றிகரமாக அனைத்து மாணவர்களுக்கும் நடத்திய பிறகு, ஓர் ஆசிரியர் சர்வர் கணினியில் இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியில் தன்னுடைய EMIS ID ஐக் கொண்டு உள்நுழைந்து தன்னுடைய மாணவர்கள் அனைவரின் செயல்திறனையும் குறிப்பெடுத்துக் கொள்ளலாம்.




49. இதற்கு முன்பாக தேர்வுக்காக இணைய இணைப்பைத் துண்டித்து வைத்திருந்தால் இப்போது மீண்டும் இணைய இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதன் பிறகு இறுதியாக, ஆசிரியர் தங்கள் EMIS கணக்கில் வலப்பக்கம் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Send Responses பிரிவின் கீழ் உள்ள Send பட்டனை அழுத்துவதன் மூலம் தங்கள் மாணவர்களின் செயல்திறனை பிற்காலப் பயனுக்காகச் சேமித்து வைக்க வேண்டும்.




மேற்காணும் படிநிலைகளைக் காணொளி வடிவில் காண்பதற்குக் கீழ்க்காணும் பள்ளிக்கல்வித் துறையின் YouTube அலைவரிசைக் காணொளிகளைக் காணவும். உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் வழியாக வினாடி வினா / வளரறி மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு மேற்காணும் படிநிலைகளே இறுதியானவை.

| | |
|---|---|
| வினாத்தாளுக்கான நிகழ்வுகளை உருவாக்குதல் - வினாத்தாளை வடிவமைத்தல் | Assessment Events and Question Paper design https://www.youtube.com/watch?v=DvMLz7UC-O0 |
| உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களில் வினாடி வினா / வளரறி மதிப்பீடுகளை நடத்துதல் | Assessment Scheduler https://www.youtube.com/watch?v=DvWi6WD5d8U |

**குறிப்பு:**

1. வகுப்பாசிரியர் மட்டுமே வினாத்தாள் நிகழ்வை உருவாக்க வேண்டும்.
2. அனைத்து பாடங்களுக்குமான வினாக்களையும் பிற பாட ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து வகுப்பாசிரியர் மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும்.
3. பொதுத்தமிழ் பாடத்துக்கு தமிழ் வழியையும், General English பாடத்துக்கு ஆங்கில வழியையும், பிற பாடங்களுக்கு பள்ளியில் உள்ள வகுப்புப் பிரிவுகளின் அடிப்படையிலும் வினாத்தாளின் மொழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவற்றை ஒரே வினாத்தாள் நிகழ்வில் ஆசிரியர் உருவாக்க வேண்டும்.
4. திங்கட்கிழமை தோறும் 6 ஆம் வகுப்புக்கும், செவ்வாய்க்கிழமை தோறும் 7 ஆம் வகுப்புக்கும், புதன்கிழமை தோறும் 8 ஆம் வகுப்புக்கும், வியாழக்கிழமை தோறும் 9 ஆம் வகுப்புக்கும், வெள்ளிக்கிழமை தோறும் விடுபட்ட மாணவர்களுக்கும் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களில் வினாடி வினா நிகழ்வை ஆசிரியர்கள் உருவாக்கி நடத்த வேண்டும்.

www.Padasalai.Net

இணைப்பு -5

உத்தேச செலவினப் பட்டியல் - தருமபுரி மாவட்டம்

| S.No | Particulars | Amount (in Rupees) |
|---|---|---|
| 1 | Lunch and Refreshment per venue (Coordinators, RPs and Participants) (33 × Rs.200 × 1 day) x 8 venues | 52,800 |
| 2 | Actual TA for RPs as per Tamil Nadu Government norms (16 RPs × Rs.600 × 1 day) | 9,600 |
| 4 | Contingency (Typing charges included) | 4,000 |
| | **Total** | **66,400** |

உத்தேச செலவினப் பட்டியல் - பெரம்பலூர் மாவட்டம்

| S.No | Particulars | Amount (in Rupees) |
|---|---|---|
| 1 | Lunch and Refreshment per venue (Coordinators, RPs and Participants) (33 × Rs.200 × 1 day) x 3 venues | 19,800 |
| 2 | Actual TA for RPs as per Tamil Nadu Government norms (6 RPs × Rs.600 × 1 day) | 3,600 |
| 4 | Contingency ( Typing charges included) | 1,500 |
| | **Total** | **24,900** |

இயக்குநர்

7/3/23

www.Padasalai.Net

## உத்தேச செலவினப் பட்டியல் - திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| S.No | Particulars | Amount (in Rupees) |
|---|---|---|
| 1 | Lunch and Refreshment per venue (Coordinators, RPs and Participants) (33 × Rs.200 × 1 day) x 8 venues | 39,600 |
| 2 | Actual TA for RPs as per Tamil Nadu Government norms (16 RPs × Rs.600 × 1 day) | 7,200 |
| 4 | Contingency ( Typing charges included) | 4,000 |
| | **Total** | **50,800** |

## உத்தேச செலவினப் பட்டியல் - அரியலூர் மாவட்டம்

| S.No | Particulars | Amount (in Rupees) |
|---|---|---|
| 1 | Lunch and Refreshment per venue (Coordinators, RPs and Participants) (33 × Rs.200 × 1 day) x 4 venues | 26,400 |
| 2 | Actual TA for RPs as per Tamil Nadu Government norms (8 RPs × Rs.600 × 1 day) | 4,800 |
| 4 | Contingency ( Typing charges included) | 2,000 |
| | **Total** | **33,200** |

13.03

இயக்குநர்

7/3/23



www.Padasalai.Net